**கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை**
**சட்ட பீடம்**
**மனித உரிமைகள் கற்கைகளுக்கான நிலையம்**

# மனித உரிமையை அடிப்படையாகக் கொண்ட சட்ட அமுலாக்க முறைமை தொடர்பான டிப்ளோமா கற்கைநெறி 2025/26

**SLQF மட்டம் 03 | பெறுமதிசார் பெறுபேறுகள் 30 (Credits)**

**ஒரு வருட கால கற்கைநெறி**



மனித உரிமைகள் அடிப்படையிலான சட்ட அமுலாக்க டிப்ளோமா கற்கைநெறியானது இலங்கையில் உள்ள சட்ட அமுலாக்க உத்தியோகத்தர்களின் மனித உரிமைகள் தொடர்பான அறிவை மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு கற்கைநெறியாகும். இந்த கற்கைநெறி 2017 இல் பாதுகாப்புத் துறையில் மனித உரிமைகள் பாதுகாப்பை மேம்படுத்துதல் (EHRP) என்ற ஆசிய பசிபிக் திட்டத்தின் கண்டறிவுகளை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டது.

## விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி

**30 ஆகஸ்ட் 2025**

## நுழைவுத் தகைமைகள்

- க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் அல்லது அதற்கு இணையான தகைமையினைக் கொண்டித்தல் வேண்டும்; அல்லது
- இலங்கை கல்வித் தகைமை மட்ட நியமம் (SLQF Level) 2 இற்கு இணையான அடிப்படை கற்கைநெறி ஒன்றினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்; அல்லது
- NVQ level 4 இனைப் பூர்த்தி செய்திருத்தல் அல்லது குறிப்பிட்டத் துறையில் குறைந்தது ஐந்து வருட தொழில் அனுபவம் அல்லது கொழும்புப் பல்கலைக்கழக கல்வியியலாளர்களால் அங்கீகரிக்கப்பட்ட ஆகக் குறைந்தது 30 'கிறடிற்ஸ்' கொண்ட பாடநெறியில் சான்றுரைக்கப்பட்ட முன் கற்றல்; மற்றும்
- சிங்களம் / தமிழ் மொழி பற்றி சிறந்த அறிவு மற்றும் தேர்வு நேர்காணலின் போது போதுமான செயற்திறனைக் கொண்டிருத்தல் வேண்டும்.

## எவ்வாறு விண்ணப்பிப்பது

விண்ணப்பப் படிவத்தை CSHR வலைத்தளமான https://cshr.cmb.ac.lk. இலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம், தொடர்புடைய சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களின் பிரதிகளுடன் விண்ணப்பக் கட்டணமான ரூ 1000.00 இனை செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினையும் இணைத்து பதிவு தபால் மூலமாக பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்:

**பணிப்பாளர்,**
**மனித உரிமைகள் கற்கைகளுக்கான நிலையம்,**
**சட்ட பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்,**
**94, குமாரதுங்க முனிதாச மாவத்தை,**
**கொழும்பு 03, இலங்கை.**

தபாலுறையின் இடது பக்க மூலையில் விண்ணப்பிக்கின்ற கற்கைநெறியின் பெயரைக் குறிப்பிடவும்.

விண்ணப்பக் கட்டணத்தை 335029300010 என்ற கணக்குக் குறியீட்டு எண்ணைப் பயன்படுத்தி எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் செலுத்தலாம் அல்லது pay.cmb.ac.lk என்ற இணையத்தளத்திற்குச் சென்று ஆன்லைன் வழியினூடாகவும் செலுத்தலாம்.

**விண்ணப்பக் கட்டணம்: LKR 1,000**

**கற்கைநெறிக்கான கட்டணம்: LKR 90, 000**

**கற்பிக்கப்படும் மொழி:** சிங்களம் மற்றும் தமிழ்

வார இறுதி நாட்களில் நடைபெறும்

விரிவுரைகள் **ZOOM தொழில்நுட்பத்தினூடாக** நடாத்தப்படும்

**மேலதிக விபரங்களுக்கு:**

cshr.cmb.ac.lk

dld@cshr.cmb.ac.lk

(+94) 011-2500879

(+94) 0776596256